தேர்தல் வழக்கை நிராகரிக்கக் கோரி உதயநிதி ஸ்டாலின் மனு: பதிலளிக்க உத்தரவு

சென்னை, ஆக. 21: சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதியில், தான் வெற்றி பெற்றதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை நிராகரிக்கக் கோரி உதயநிதி ஸ்டாலின் தாக்கல் செய்த மனுவுக்கு, தேர்தல் வழக்குத் தொடர்ந்த மிலானி என்பவர் பதிலளிக்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

சட்டப்பேரவைத் தேர்தலில் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதியில் திமுக சார்பில் உதயநிதி ஸ்டாலின் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அவரது வெற்றியைச் செல்லாது என அறிவிக்கக் கோரி மிலானி என்பவர் தேர்தல் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த தேர்தல் வழக்கு நீதிபதி ஜி.அருள்முருகன் முன் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது உதயநிதி ஸ்டாலின் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் ரிச்சர்ட்சன் வில்சன், இந்த தேர்தல் வழக்கை நிராகரிக்கக் கோரி மனுத் தாக்கல் செய்துள்ளதாகவும், இந்த வழக்கை நிராகரிக்க வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தார்.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி, உதயநிதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிராகரிப்பு மனுவுக்கு, தேர்தல் வழக்குத் தாக்கல் செய்துள்ள மனுதாரர் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

அரசியல் கைது நடவடிக்கைகளுக்கு எதிராக சட்டப் பாதுகாப்பு

திமுக எம்எல்ஏ வலியுறுத்தல்

சென்னை, ஆக. 21: அரசியல் கைது நடவடிக்கைகளைத் தடுக்கும் வகையில் எம்எல்ஏ-க்களின் பேச்சுரிமையைக் காக்க சட்டப் பாதுகாப்பு வேண்டும் என்று திமுக உறுப்பினர் மனோஜ் பாண்டியன் வலியுறுத்தினார்.

பேரவையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற மானியக் கோரிக்கை விவாதத்தின் போது அவர் பேசியதாவது:

பேரவையில் எம்எல்ஏ-க்களின் பேச்சுரிமையைப் பாதுகாக்க அவைத் தலைவர் இருக்கிறார். கருத்துகளைத் தெரிவிக்க வாய்ப்பும் அளிக்கப்படுகிறது. ஆனால், வெளியில் எங்களுக்கான உரிமையைக் காக்க இயலவில்லை. விவாதத்துக்குரிய கருத்தைத் தெரிவித்தாலும், அதன்பேரில் உடனடியாக கைது நடவடிக்கையை முன்னெடுக்கக் கூடாது என உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. அந்தத் தீர்ப்பை முறையாக அமல்படுத்த வேண்டும். அரசியல் கைது நடவடிக்கைகளைத் தடுக்க எம்எல்ஏ-க்களின் பேச்சுரிமைக்கு சட்டப் பாதுகாப்பு அவசியம் என்றார்.

இதற்கு சட்டத் துறை அமைச்சர் நிர்மல் குமார் அளித்த பதில்: 'எந்த எம்எல்ஏ மீதும் வேண்டுமென்றே நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. விதிகளுக்கும், சட்டத்துக்கும் உள்பட்டே அதை முன்னெடுக்கிறோம். அனைவருக்கும் பேச்சுரிமை, கருத்துரிமை உள்ளது. விதிகளை மீறி பெண்களுக்கு எதிராகவும், ஆட்சேபத்துக்குரிய வகையிலும் கருத்து தெரிவித்தால் மட்டுமே நடவடிக்கை எடுக்கப்படுகிறது' என்றார்.

பொருளாதாரத்தில் பின்தங்கியோருக்கு இடஒதுக்கீடு

அதிமுக உறுப்பினர்களிடையே மாறுபட்ட கருத்து

சென்னை, ஆக. 21: பொருளாதாரத்தில் பின்தங்கியோருக்கு (இடபிள்யூஎஸ்) இடஒதுக்கீடு வழங்குவது தொடர்பாக அதிமுக உறுப்பினர்களிடையே பேரவையில் மாறுபட்ட கருத்து எழுந்தது. அதே போன்று, அவையில் நடந்து கொண்ட விதம் குறித்து அதிமுக-திமுக இடையே கருத்து மோதல் ஏற்பட்டது.

பேரவையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற மின்சாரம், சட்டம், சிறைத் துறை, இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் கீழ் பேசிய அதிமுக உறுப்பினர் தளவாய் சுந்தரம், 'திமுக ஆட்சியின்போது என் மீது 29 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன; கடந்த காலத்தில் பேரவை மரபுகளை மீறி அவைத் தலைவரின் இருக்கையில் அமர்ந்தது யார்?, குழப்பம் ஏற்படுத்தியவர்கள் எவர்? என்பது அனைவருக்கும் தெரியும்; மேலும் பேசினால் நிறைய விஷயங்கள் வெளியே வந்துவிடும்' என்றார்.

அதற்குப் பதிலளித்த திமுக உறுப்பினர் கே.என்.நேரு, 'அதிமுக ஆட்சியாளர்கள் எனக்கு எதிராக 14 வழக்குகளைப் பதிவு செய்தனர்; பேசுவதற்கு எங்களிடமும் நிறைய உள்ளது' என்றார்.

அப்போது குறுக்கிட்ட பேரவைத் தலைவர் ஜே.சி.டி.பிரபாகர், 'இதுபோன்ற விவாதங்களை வெளியே மேடை போட்டு இரு தரப்பும் பேசுங்கள்; நாங்கள் கேட்க ஆர்வமாக இருக்கிறோம்' என்றார்.

இதனிடையே, பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு மத்திய அரசு கொண்டுவந்த 10 சதவீத இடஒதுக்கீடு குறித்துப் பேசிய தளவாய் சுந்தரம், அதை தமிழகத்தில் அமல்படுத்தாதால் கன்னியாகுமரி மாவட்டத்தில் பலர் பாதிக்கப்படுவதாகவும், குறைந்தது 5 சதவீத இடஒதுக்கீடாவது அந்தப் பிரிவின் கீழ் வழங்க வேண்டும் என்றும் கூறினார்.

அப்போது அதற்கு எதிராக அதிமுக உறுப்பினர் சி.வி.சண்முகம் பேசியதாவது: தளவாய் சுந்தரம் தெரிவித்த கருத்து அவருடைய தனிப்பட்ட விருப்பமாக இருக்கலாம். அதிமுக சமூக நீதி காக்கும் இயக்கம். எங்களுக்கு அந்த இடஒதுக்கீட்டில் உடன்பாடு இல்லை.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மருத்துவப் படிப்பில் 7.5 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் ஆணைக்கு ஒப்புதல் அளிக்க அப்போதைய ஆளுநர் ஒரு நிபந்தனை விதித்தார். அதாவது, பொருளாதாரத்தில் பின்தங்கியோருக்கு 10 சதவீத ஒதுக்கீடு வழங்கினால் 7.5 சதவீத இடஒதுக்கீட்டுக்கு அனுமதி அளிப்பதாகக் கூறினார். அதற்கு அப்போதைய முதல்வர் எடப்பாடி பழனிசாமி ஒப்புக்கொள்ளாமல், தீர்க்கமாக இருந்து எந்த நிபந்தனையையும் ஏற்காமல் 7.5 சதவீத ஒதுக்கீட்டை பெற்றுத் தந்தார் என்றார் சி.வி.சண்முகம்.

அதிக மின் கட்டணம் வந்தது ஏன்?

அமைச்சர் நிர்மல் குமார் விளக்கம்



சென்னை, ஆக. 21: தேர்தல் நேரத்தில் நேரில் சென்று மின் கணக்கீடு எடுக்காததே மின் கட்டணம் கூடுதலாக வந்ததற்கு காரணம் என்று மின் துறை அமைச்சர் நிர்மல் குமார் தெரிவித்தார்.

பேரவையில் அந்தத் துறை மானியக் கோரிக்கை மீது பேசிய முன்னாள் மின்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி, 'முந்தைய திமுக ஆட்சியில் 2 லட்சம் விவசாயிகளுக்கும், 35 லட்சம் நுகர்வோருக்கும் புதிய மின் இணைப்புகள் அளிக்கப்பட்டன. மின்துறையிலிருந்து 18 தரவு சேமிப்புக் கருவிகள் (ஹார்டு டிஸ்க்) காணாமல் போயின. ஆனால், 38 கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தவெக ஆட்சியில் 3 மடங்கு மின் கட்டணம் உயர்ந்துள்ளது. ஏராளமான பணியிடங்கள் காலியாக உள்ளன. இதே பணியாளர்களை வைத்து திமுக அரசு சீரான மின்சாரத்தை வழங்கியது. ஆனால், தற்போது அதிக அளவில் மின் வெட்டு ஏற்படுகிறது' என்றார்.

மின் துறை அமைச்சர் பதில்: இதற்கு பதிலளித்து பேசிய அமைச்சர் நிர்மல் குமார், 'அதிக மின் கட்டண விவகாரம் குறித்து தானாக முன்வந்து மின்துறை விசாரித்தது. 4 மடங்கு கட்டணம் வந்ததாக எழுந்த 3,70,000 புகார்களில் 2,719 மட்டுமே மின் மீட்டர் பழுதால் ஏற்பட்டவை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

மீதமுள்ள புகார்களுக்கு முந்தைய ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட 'டேபிள் ரீடிங்' தான் காரணம். அதாவது, தேர்தல் நேரத்தில் நேரில் சென்று மின் ரீடிங் எடுக்காமல், முந்தைய மாத கட்டணத்தை அப்படியே வசூல் செய்துள்ளனர். 4 மாதங்களுக்குப் பிறகு நேரில் சென்று மின் கணக்கீடு எடுத்ததால் கூடுதல் கட்டணம் வந்துள்ளது. கடந்த திமுக ஆட்சியில் மின் துறையில் போடப்பட்ட 45 டெண்டர்களில் பெரிய அளவில் முறைகேடுகள் கண்டறியப்பட்டுள்ளன. இதுகுறித்து வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது' என்றார்.

தொடர்ந்து, முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் கேள்விக்கு அமைச்சர் நிர்மல் குமார் பதிலளித்து கொண்டிருந்தபோது, திமுக, தவெக உறுப்பினர்களிடையே வாக்குவாதம் ஏற்பட்டு அவையில் கடும் அமளி நிலவியது.

பேரவைத் தலைவர் எச்சரிக்கை: முன்னதாக, பேரவையில் அமளியின்போது இருக்கையை விட்டு எழுந்து முன்வரிசைக்கு வேகமாக வந்த திமுக உறுப்பினர்கள் வசந்தம் கார்த்திகேயன், முத்துராஜா, தவெக உறுப்பினர் மதார் பதூருதீன் ஆகியோருக்கு எச்சரிக்கை விடுத்த பேரவைத் தலைவர், மீண்டும் இதுபோன்று செயல்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

பொது சேவை அமைப்புகளுக்கு தடையில்லா மின்சாரம் வழங்குவதும் பொதுநல நோக்கம்தான்

சென்னை, ஆக. 21: நீதித்துறை மற்றும் முக்கிய பொது சேவை அமைப்புகளுக்கு தடையில்லா மின்சாரம் வழங்குவதும் பொதுநல நோக்கம்தான் என சென்னை உயர்நீதிமன்றம் கருத்து தெரிவித்தது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குரைஞர் எம்.டி.அருணன் என்பவர் தாக்கல் செய்த மனுவில், உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள 15 கிரவுண்ட் நிலம், தமிழ்நாடு மின்சார வாரியத்துக்கு கடந்த 1990-ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. ஒரு பகுதியில் மட்டும், மின்சார கட்டணம் வசூலிக்கும் மையம் செயல்படுவதால், காலியாக உள்ள நிலத்தைத் திரும்பப் பெற உத்தரவிட வேண்டும் எனக் கூறியிருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது, வழக்குரைஞர் அருணன், உயர்நீதிமன்றத்தில் நிலவும் இட நெருக்கடியால், வாகனங்கள் நிறுத்துவது சிக்கலாக உள்ளது. எனவே, மின்சார வாரியத்திடம் இருந்து காலி இடத்தைப் பெற்று, நீதிமன்ற கட்டடங்கள், வாகன நிறுத்துமிடம் உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என தெரிவித்தார்.

அப்போது அரசுத் தரப்பில் ஆஜரான தலைமை வழக்குரைஞர் விஜய் நாராயண், குறிப்பிட்ட அந்த இடத்தில், துணை மின் நிலையம் இயங்கி வருகிறது. கூடுதலாக 5,500 கிலோ வாட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்க வேண்டியுள்ளது. தற்போதைய துணை மின் நிலையத்தில் இருந்து, உயர்நீதிமன்றம், அரசு பொது மருத்துவமனை, துறைமுகம் ஆகியவற்றுக்கு மின் விநியோகம் வழங்கப்படுகிறது. மின்மாற்றிகளுக்கு இடையில் பாதுகாப்பு கருதி காலியிடம் விட்டு வைப்பது கட்டாயம் என விளக்கம் அளித்தார்.



நீதிமன்றத்தில் நிலவும் இட நெருக்கடியால், வாகனங்கள் நிறுத்துவது சிக்கலாக உள்ளது. எனவே, மின்சார வாரியத்திடம் இருந்து காலி இடத்தைப் பெற்று, நீதிமன்ற கட்டடங்கள், வாகன நிறுத்துமிடம் உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என தெரிவித்தார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், நீதித்துறைக்கு உள்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்துவது அவசியம். இருப்பினும், இந்த துணை மின் நிலையத்தை மாற்றினால், சென்னை உயர்நீதிமன்றம் உள்ளிட்ட பிற பொது பயன்பாட்டு சேவை அமைப்புகளுக்கான மின் விநியோகம் பாதிக்கப்படும். நீதித்துறை மற்றும் பொது சேவை அமைப்புகளுக்கு தடையில்லா மின்சாரம் வழங்குவதும் பொதுநல நோக்கம்தான் எனக்கூறி வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

மேட்டூர் அணையில் மத்திய நீர்வளத் துறை கூடுதல் செயலாளர் ஆய்வு

மேட்டூர், ஆக. 21: மேட்டூர் அணையில் மத்திய நீர்வளத் துறை ஆணைய உறுப்பினரும், கூடுதல் செயலாளருமான யோகேஷ் பைத்தங்கர் வெள்ளிக்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

அணையின் வலதுகரையில் உள்ள நீர் அளவீட்டு பகுதியை அவர்பார்வையிட்டார். பின்னர் அணையின் வலதுகரையில் உள்ள 75 அடி உயரம் கொண்ட பவளவிழா கோபுரத்தில் ஏறி அங்கிருந்து அணையின் முழுத் தோற்றத்தையும், நீரின்றி வறண்டு காணப்படும் நீர்த் தேக்கப் பகுதியையும் பார்வையிட்டார். மேலும், அணை குறித்த விவரங்கள், அணையின் நீர் இருப்பு, அணைக்கு நீர்வரத்து, நீர் திறப்பு உள்ளிட்ட விவரங்களை நீர்வளத் துறை அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின்போது நீர்வளத் துறை மேட்டூர் செயற்பொறியாளர் வெங்கடாசலம், உதவி செயற்பொறியாளர் செல்வராஜ், உதவிப் பொறியாளர் சதீஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

NAME CHANGE

I, **CARMEL DAISY ALBERT CHETTIAR,** Daughter of Joseph, (Date of Birth: 22.10.1982, Place of Birth : Kothamangalam) residing at Door No.6/105-20, VIP Nagar, Near Bannari Amman Sugars, Sadumugai, Sathyamangalam, Erode Dist - 638503 Tamilnadu, India, shall henceforth be known as **CARMEL DAISY JOSEPH.**

தமிழ்நாடு கனிம நிறுவனம்
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
எண்.31, காமராஜர் சாலை, லேப்காக்ஸ், சென்னை-600005, தொலைபேசி: 044-28415003, 28511972
இ - ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம்

1	திட்டத்தின் பெயர்	எண்ணூர் தொழிற்சாலையில் இருக்கும் Grade II & Grade III இந்திய தர மணல் (உள்ளது உள்ளபடியே) விற்பனை
2	ஒப்பந்தப்புள்ளி எண்/ நாள்	438/விஜபி-1/ 2026, நாள்.21.08.2026
	ஒப்பந்தப்புள்ளி id எண்	2026_TNMIN_696743_1
3	இ-ஒப்பந்தப்புள்ளி தாக்கீல் ஒப்பந்தப்புள்ளி படிவம் சமர்பிக்க வேண்டிய கடைசி நாள்	21.09.2026 பிற்பகல் 4.00 மணி வரை
4	இ-ஒப்பந்தப்புள்ளி தாக்கீல் தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள்	22.09.2026 பிற்பகல் 4.00 மணி
5	ஒப்பந்தப்புள்ளி படிவம் விலை / முன் வைப்புத் தொகை	ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) திருப்பித்தரத்தக்கதல்ல ரூ.6,62,569/- (ரூபாய் ஆறு இலட்சத்து அறுபத்தி இரண்டாயிரத்து ஐந்நூற்றி அறுபத்தி ஒன்பது மட்டும்)

குறிப்பு: மேலும் விவரங்களுக்கு Tamilnadu e-tendering portal: **https://tntenders.gov.in** இணையத்தினை பார்வையிடவும்

செ.ம.தொ.இ/2646/ஒப்பந்தப்புள்ளி/2026 **பொது மேலாளர் (நி)**

NAME CORRECTION

I, **RANGAMMAL .N,** W/o. Narayanasamy .A, M/o. RAGUVARAN .N, aged 61 years, residing at No.1/162-1, Ramnagar, Pongalur, Palladam Taluk, Tiruppur District, Tamilnadu, hereby declare that my correct name is **"RANGAMMAL .N"** and my correct date of birth is 02/01/1965, as per my Aadhaar and PAN records. In my son's Defence Family Records, my name & date of birth have been inadvertently mentioned as "N.RENGAMMAL" and "04/06/1965" instead of "RANGAMMAL.N" and "02/01/1965". I affirm that the above statement is true and correct. If found false at any later stage, I shall be liable for legal action.

RANGAMMAL .N
Place: Pongalur

பெயர் மாற்றம்

ஆறுமுக சந்திர சேகரன், த/பெ. கேட் பழனிசாமி, **S.F.No.547/1C2,** கேட்டுபாளையம் ரோடு, அகுருப்பாளையம், அவிநாசி தாலுக்கா, திருப்பூர் மாவட்டம் 641655 ஆகிய நான் அறிவிப்பது : எனது கடைசி பாஸ்போர்ட்டில் எனது தந்தை பெயர் **PAZHANISAMIGOUNDER** மற்றும் எனது பெயர் **ARUMUGACHANDRASEKARAN** என்று உள்ளது. எனது நடப்பு ஆதார், பான் கார்டுகள் படி எனது தந்தை பெயர் பழனிசாமி **(PALANISAMY)** மற்றும் எனது பெயர் ஆறுமுக சந்திர சேகரன் **(ARUMUGA CHANDRA SEKARAN)** என்று இனி நான்கள் அறியப்படுவோமாக நாங்கள் இருவரும் அதே நபர்கள் தான் வேறு இல்லை.

ஆறுமுக சந்திர சேகரன்

NAME CORRECTION

I, **PAVITHRA PONNUSAMY,** W/o. RAGUVARAN .N, aged 32 years, residing at No.1/162-1, Ram Nagar, Pongalur, Palladam Taluk, Tiruppur District, Tamilnadu, hereby declare that my correct name is **"PAVITHRA PONNUSAMY"** as per my Aadhaar and PAN records. My name has been inadvertently mentioned as "PAVITHRA .R" in my husband's Defence Family Records. I affirm that the above statement is true and correct. If found false at any later stage, I shall be liable for legal action.

PAVITHRA PONNUSAMY
Place: Pongalur

இ.வே.ஆ.கு.-மத்திய வேளாண் பொறியியல் நிறுவனம்
மண்டல நிலையம், கோயம்புத்தூர் - 641 007 (தமிழ்நாடு)
भा कृ अ प – केन्द्रीय कृषि अभियांत्रिकी संस्थान
प्रादेशिक केंद्र कोयम्बतूर 641007 (तमिलनाडु)

ICAR - CENTRAL INSTITUTE OF AGRICULTURAL ENGINEERING REGIONAL STATION, COIMBATORE - 641007 (TAMILNADU)
Telephone Nos. 0422-2472624/23 E-mail: rsciaecbe@gmail.com

WALK-IN-INTERVIEW FOR YOUNG PROFESSIONAL I ON 07th SEPTEMBER 2026

RECRUITMENT OF YOUNG PROFESSIONAL I (01 no.) - "CAD CELL" at ICAR-CIAE RS COIMBATORE, TAMIL NADU.

For detailed notification, please visit Institute website https://ciae.res.in and click on "ANNOUNCEMENT" from the Home page.

HEAD, ICAR-CIAE-Regional Station

MANAPPURAM FINANCE LTD.
CIN: L65910KL1992PLC006623,
Registered Office: W - 4/ 638A, Manappuram House, P.O. Valapad, Thrissur - 680 567, Kerala, India

தங்க நகைகள் பொது ஏலம்

நகைகளை அடமானம் வைத்திருப்போர் மற்றும் குறிப்பாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கண்ட கணக்குகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளுக்கான பொது ஏலம் கிழக்கண்ட கிளைகளில் 16.09.2026 தேதி அன்று காலை 10 மணி யில் இருந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.தங்க நகைகளை மீட்க தவறிய வாடிக்கையாளர்களின் நகைகளை, அவர்களுக்கு பதிவு தபால்கள் அனுப்பிய பிறகும், நினைவுபடுத்திய பிறகும், நாங்கள் தங்க நகைகளை ஏலம் விடுகிறோம். ஏலம் போகாத தங்க நகைகளை எவ்வித முன்னறிவிப்பினறி எந்த ஒரு இதர நாளிலும் ஏலம் விடப்படும். ஏலம் விடப்படும் இடம் அல்லது தேதியில் ஏதேனும் மாற்றங்கள் (இருந்தால்) அவை பற்றிய அறிவிப்பு ஏலம் நடக்குமிடத்தில் எழுதி வைக்கப்படும் மற்றும் இணையதளத்தில் வெளியிடப்படும்.வேறு எந்த முன்னறிவிப்பும் அளிக்கப்படாது.

அடமானங்களின் பட்டியல் :

கோயம்புத்தூர், அண்ணூர் கோயம்புத்தூர், 0121550810038371, அவினாசி, 0102530810760120, 0123, சின்னமயபாளையம், 0133400820000158, ஈச்சனேரி கோயம்புத்தூர், 0116050710052541, கணபதி ராஜேந்திர பிரசாத் தெரு, 0101980710780469, 0593, கோல்டுவின் பஸ் நிறுத்தம் கோயம்புத்தூர், 0128460710021639, 1559, 1584, காரமடை கோயம்புத்தூர், 0127620710028753, காரமடை ரோடு மேட்டுப்பாளையம், 0101250810779084, கவுண்டம்பாளையம், 0115040710031333, 1133, 1153, 1154, கிணத்துக்கடவு, 0111740810030112, மேட்டுப்பாளையம், 0125100810038210, நரசிம்மபாளையம், 0118060700037567, 7577, 7576, 0309, 7363, 7364, பல்லடம், 0101480810085362, பீளமேடு கோயம்புத்தூர், 0127800810030161, போதனூர், 0126720810043200, பொள்ளாச்சி, 0100970710817360, 7101, 0181, ராஜா தெரு, 0109400720000063, 6953, ராமநாதபுரம், 0100620810101412, 0132, 0133, 0148, சாய்பாபா காலனி, 0102300710051931, 1928, 0088, சமலபுரம், 0126850720000204, 7211, 7215, சாரதா மில் ரோடு சுந்தராபுரம், 0108570810067913, சரவணம்பட்டி கோயம்புத்தூர், 0125300710030452, 0520, 0377, 0379, 0395, 0407, 0556, சித்தபுதூர், 0110860810057602, சிவனந்தபுரம் சரவணம்பட்டி, 0112940810048157, சோமனூர் கோயம்புத்தூர், 0118300720000120, 0127, சுந்தராபுரம், 0115470810053539, 0144, 0145, துடியலூர், 0114310710039837, 9894, 9902, 9593, 9616, 9656, 0201, 0230, திருப்பூர், 0100630710786034, 0212, திருப்பூர் பி என் ரோடு, 0103410710785533, 0221, 5437, 5647, வீரபாண்டிபிரிவு கோயம்புத்தூர், 0123620810040976, வெங்டரமண் தெரு பொள்ளாச்சி, 0115540810044693, 4701, ஈரோடு, பவானி, 0101880720000246, பவானி மேட்டூர் ரோடு, 0120820810032778, சென்னிமலை ஈரோடு, 0128360820000220, சித்தோடு, 0126140710055016, தாராபுரம், 0101860710769804, 9887, 9888, 9910, ஈரோடு, 0100790810061149, கோபிசெட்டிபாளையம், 0112680810055320, கவிங்கராயன்பாளையம், 0129580810048813, காங்கயம், 0101800820000153, கொடுமுடி ஈரோடு, 0131020810027747, மூலப்பாளையம் ஈரோடு, 0123040710047536, 7417, 0250, நாச்சியப்பா ரோடு, 0118620710023993, நம்பியூர் ஈரோடு, 0128650810032861, 0170, 0185, பெருந்துறை ஈரோடு, 0111870810051429, புஞ்சைபுளியம்பட்டி, 0102600810765357, சத்தி ரோடு ஈரோடு, 0110590810037378, சத்தியமங்கலம் பஸ் ஸ்டாண்டு, 0123310810050865, சிவகிரி ஈரோடு, 0120580810030400, சூலை ஈரோடு, 0121380710051664, சூரம்பட்டி , 0127700710062443, 2792, 0547, 2336, நீலகிரி, குன்னூர், 0101240810786838, ஊட்டி, 0102520820000241, ராமநாதபுரம், திருப்பூர், அனுப்பர்பாளையம், 0111470710063765, காலனி பஸ் ஸ்டாப் திருப்பூர், 0111910810043086, 3228, 0223, காங்கேயம் ரோடு திருப்பூர், 0110570810065239, 5244, குன்றத்தூர், திருப்பூர், 0117130810032993, மாணிக்கபுரம் ரோடு பல்லடம், 0132310720000279, பரப்பாளையம், திருப்பூர், 0128640810033265, 3276, பூயம்பாளையம், 0133410710037768, 0296, வெள்ளக்கோயில் திருப்பூர், 0117340820000176, 0177,

மேற்கண்ட ஏலத்தில் பங்கேற்க விரும்பும் நபர்கள் பின்வருவனவற்றைப் பின்பற்ற வேண்டும்: ஆர்வள்ள ஏலதாரர்கள், ஏலம் நடைபெறும் அதே நாளில், ரூ. 10,000/- தொகையை ஈஎம்டி ஆக (வெற்றி பெறாத ஏலதாரர்களுக்குத் திருப்பித் தரப்படும்) என்இஎஃப்டி/ஆர்டிஜிஎஸ் மூலம் செலுத்த வேண்டும். ஏலத்தில் பங்கேற்பவர்கள் செல்லுபடியாகும் அடையாள அட்டை/பான் கார்டை வைத்திருக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 09072607147 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
மணப்புரம் பைனான்ஸ் லிமிடெட்-க்காக

THE INSTITUTE OF ROAD TRANSPORT
Regd. Office: 100 Feet Road, Taramani,
Chennai - 600113, Tamil Nadu, India. E.mail: irttaramani@gmail.com

E-TENDER FOR SUPPLY OF TYRES, TUBES & EPDM FLAPS SEPERATELY TO THE 8 TNSTUs
1)IRT Tender No: 04/TYRE/CP/IRT/2026, 2) Tender No: 05/TUBE/CP/IRT/2026
3)Tender No: 07/FLAP/CP/IRT/2026

The Institute of Road Transport (IRT), invites the following E-tenders under two bid system separately for the Supply of Tyres, Butyl Tubes and EPDM Flaps from the respective manufacturers to all Tamil Nadu State Transport Undertakings from the firms fulfilling the eligibility criteria as specified in the tender document. The Tender Document of **Supply of Tyres, Butyl Tubes & EPDM Flaps can be downloaded from 24.08.2026.** The bids for all the tenders reference shall be submitted separately online at **https://tntenders.tn.gov.in** with supporting documentary evidences before **23.09.2026 at 15.00 hrs** respectively. The schedule, Pre-bid, tender opening and other terms and conditions are as specified in the tender document.

Modification (if any) in tender terms and conditions and tender invitation period will be uploaded only in the website and the tenderers are requested to go through the above website periodically.

DIPR/2639/TENDER/2026 **DIRECTOR**

தமிழ்நாடு அரசு
இந்து சமய அறநிலையத்துறை
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி நகர், பழநி வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு -- (இரு உறை முறை)
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண். 1/2026-2027 நாள்.20.08.2026
ஒப்பந்த வகைப்பாடு -- இனம் வாரியான விலை விகிதம்

மேற்காணும் திருக்கோயில் இணைஆணையர்/ செயல்அலுவலர் அவர்களால் கீழ்க்காணும் விவரப்படியான பணிக்கு ஒப்பந்தப்புள்ளி படிவங்கள்28.08.2026-ம் தேதி முதல் 28.09.2026-ம் தேதி மாலை 5.45 மணி வரை பதிவிற்கும் கீழ்கண்ட தமிழ்நாடு அரசின் அதிகாரப்பூர்வ ஒப்பந்தப்புள்ளி இணையதளம் https://tntenders.gov.in மூலம் செய்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளத்தில் 29.09.2026 அன்று பிற்பகல் 3.00 மணி வரை வரவேற்கப்படுகிறது. பதிவு செய்யப்பட்ட இணையதள ஒப்பந்தப்புள்ளிகள் 29.09.2026 மாலை 4.00 மணி அளவில் இணையதளம் வாயிலாக திறப்பு செய்யப்படும். மேலும், முன் வைப்புத்தொகையினை இணையதளம் மூலமாக மட்டுமே செலுத்தப்படவேண்டும். அனைத்து ஆவணங்களும் PDF-ஆக இணைக்கப்பட வேண்டும். முக்கிய விவரங்கள், ஒப்பந்தப்புள்ளி ஆவணம் மற்றும் திருத்திய விவரங்கள் https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் மட்டுமே பெறவேண்டும். செய்தித்தாளில் வெளியிடப்பட மாட்டாது.

வ.எ	வேலையின் பெயர்	ஒப்பந்தத் தொகை (Including GST 18%)	முன் வைப்புத் தொகை ரூ.	பணி முடிக்க வேண்டிய காலம்	ஒப்பந்ததாரர் தகுதி
1	ந.க.எண்:1494/2025/இ1 ஒட்டன்சத்திரம் அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவிகளுக்கான தங்கும் விடுதி மற்றும் உணவுக்கூடம் கட்டும் பணி இரு உறை முறை (இரண்டாம் அழைப்பு)	ரூ.17,14,75,000/-	ரூ.8,68,000/-	18 மாதங்கள்	தமிழ்நாடு அரசு துறை/ அரசு நிறுவனங்களில் பதிவு பெற்ற நடப்பிலுள்ள தகுதி வாய்ந்த வகுப்பு ஒப்பந்தக்காரர்கள்

துணை ஆணையர்
இணை ஆணையர் / செயல் அலுவலர் (மு.கூ.பொ)
அறங்காவலர் தலைவர் மற்றும் அறங்காவலர்கள் குழு
செ.ம.தொ.இ./ 2638 / வரைகலை/2026

ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்
மேட்டுப்பாளையம் கிளை: கதவு எண்.152/G2, K.K.நகர், R.S.B கட்டிடம், மீனாட்சி பேருந்து நிறுத்தம், கோயம்புத்தூர் மெயின் ரோடு, மேட்டுப்பாளையம் - 641301

கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கான அறிவிப்பு
2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதி சொத்துக்களை சீரமைத்தல் & கடனீட்டுச் சொத்தின் உரிமை அமலாக்கச் சட்டத்தின் பிரிவு 13(2) கீழ் அறிவிப்பு

கடன்தாரர்: **Mr.K.R.சுபாஷ்,** S/o.K.K.ராகவன், எண்.3/225, சூர்யா கார்டன், பண்ணிமடை கிராமம், கோயம்புத்தூர்-641107 **மேலும் முகவரி,** அபின் கிருஷ்ணா பேக்கரி, எண்.4/435, சின்ன தடாகம், கோயம்புத்தூர்-641108. **மேலும் முகவரி,** மனை எண்.5, ஸ்ரீ ஆண்டாள் அவென்யூ-III, எண்.21, பண்ணிமடை கிராமம், பன்னிமடை, தடாகம் ரோடு, கோயம்புத்தூர்-641017, **சக-கடன்தாரர்: Mrs.S.கவிப்பிரியா,** W/o.K.R.சுபாஷ், எண்.3/225, சூர்யா கார்டன், பண்ணிமடை கிராமம், கோயம்புத்தூர்-641107 **மேலும் முகவரி,** கார்த்திகா வேஷ்டி டிசைனர், எண்.83, ரயில்வே கேட் சாலை, GKD கல்யாண மஹால் எதிரில், LMW, PN பாளையம், கோயம்புத்தூர்-641020 **மேலும் முகவரி,** மனை எண்.5, ஸ்ரீ ஆண்டாள் அவென்யூ-III, எண்.21, பண்ணிமடை கிராமம், பன்னிமடை, தடாகம் ரோடு, கோய